**ஒதுக்கீட்டுத் தலைப்பு 262, மாத்தறை மாவட்டச் செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) வினைத்திறனானதும் பயனுறுதி மிக்கதுமான மாவட்ட நிர்வாக முறையொன்றை பேணிச்செல்லல்.

(ஆ) மக்கள் திருப்பிதியை உயர்த்தும் விதத்தில் பொதுத் துறையின் ஊடாக வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுவதனை உறுதி செய்தல்.

(இ) பெறுபேற்றை அடைதல் எண்ணக்கரு, பொறுப்புக்கள், சிக்கனமான வளப் பாவனை, பக்கச்சார்பின்மை, வெளிப்படைத் தன்மை போன்ற அர்த்தமுள்ள முறைமைகளை அரசாங்க சேவையினுள் ஸ்தாபித்தல்.

(ஈ) அரசாங்கத் துறையின் மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகளை அமுலாக்கல்.

(உ) அரசாங்க உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் தொடர்பான கொள்கைகளுக் கேற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

(ஊ) மாவட்டத்தினுள் செயற்படுகின்ற பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அதிகாரசபைகள் மூலம் அமுலாக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்திட்டங்களையும் ஒழுங்கு செய்தல், நிதி மற்றும் நிதிசாராத வளங்களை ஈடுபடுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு மாவட்ட மக்களின் நலனோம்பல் மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தல்.

(எ) மாவட்ட அதிகாரப் பிரதேசத்தினுள் வாழும் மக்களின் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார தேவைப்பாடுகளை மாவட்டச் செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களினூடாக நிறைவேற்றுதல்.

(ஏ) மாவட்டத்தின் அரசாங்க முகவராக செயற்பட்டு பல்வேறுபட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களிற்கு சரியான மற்றும்

ஒறுதியான தகவல்களை கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் திரட்டி தொகுத்து வழங்குதல்.

(ஐ) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினூடாக அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்களின் சார்பாக மாவட்டத்தினுள் அவைகளுக்குரித்தான வருமானங்களை ஒன்று திரட்டுதல், கணக்கீடு செய்தல் மற்றும் அவற்றை பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல்.

(ஒ) வெள்ளம், சூறாவளி, வரட்சி, ஆழிப் பேரலை போன்ற அவசர அனர்த்த நிலமைகளில் மக்களுக்குத் தேவையான உடனடி நிவாரணச் சேவைகள் மற்றும் உதவிகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தினை முன்னைய நிலைக்குக் கொண்டுவருதல்.

(ஓ) மாவட்டப் பாதுகாப்புக் குழுவின் தலைமையாகச் செயற்பட்டு மாவட்டத்தில் வசிக்கும் மக்களது பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஔ) மாவட்டத்தில் கலாசார, சமய மற்றும் அவ்வப்போது ஏற்படும் பிற அரச விழாக்களையும் ஏற்பாடு செய்யும் தலைமையாகச் செயற்படுதல்.

(க) பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிகழ்ச்சிதிட்டத்தை அமுல்படுத்தலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட அபிவிருத்திக் குழு என்பவற்றினது செயலாளராகப் பணியாற்றி மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தலும் அமுலாக்கலும் மேற்பார்வையிடலும்.

(கா) மாவட்டத்தின் 16 பிரதேச செயலாளர்களுடன் பிரதேச நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் தலைமையமாகப் பணியாற்றுவதுடன் அவற்றின் வினைத்திறனை மேம்படுத்தலும்.

(கி) மாவட்டத்தில் நிர்வாக நடவடிக்கைகளின்போது செயற்திறனையும் தரத்தினையும் அரிகரிப்பதற்காக நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுடன் அதற்காகப் பதவியணியினருக்கு ஊக்கமளித்தலும்.

(கீ) மாவட்ட அதிகாரப் பிரதேசத்தில் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றினது பிரதித் தலைவராகப் பணியாற்றி ஒவ்வொரு நிறுவனத்தினதும் குறிக்கோள், நோக்கங்கள், பணிகள் என்பவற்றை ஈடுடேற்றும் விதத்தில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.

(கு) சகல தேர்தல் நடவடிக்கைகளின்போதும், தேர்தல்கள் ஆணையாளரது பிரதிநிதியாகப் பணி புரிந்து மாவட்ட தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தராக நியாயமானதும் பாரபட்சமற்றதாகவும் தேர்தல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(கூ) மாவட்டத்தினுள் உத்தியோகத்தர்களது ஆளுமை மற்றும் ஆற்றலை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(கெ) அவசர நிலமைகளில் அரசாங்கத்தின் முகவராக இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.

(கே) வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்கள் மற்றும் உள்நாட்டு நிதியச் செயற்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் மூலம் சொத்து முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்தலும்.

**1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) மாத்தறை
(ஆ) வெலிகம
(இ) கம்புறுபிடிய
(ஈ) ஹக்மன
(உ) பஸ்கொட
(ஊ) கொட்டபொல
(எ) மாலிம்பட
(ஏ) அக்குறஸ்ஸ
(ஐ) திக்வெல்ல
(ஒ) திஹகொட
(ஓ) முலடியன
(ஔ) தெவிநுவர
(க) வெலிபிட்டிய
(கா) கிரிந்த புஹுல்வெல்ல
(கி) பிடபெத்தர
(கீ) அதுறலிய

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்களைச் சமர்ப்பிக்காமை**

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன்,

அந்த ஐய வினாக்களுக்கு உரித்தான கணிப்பிடக் கூடியதாகவிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,415,368 ஆகும்.

**(ஆ) ஒதுக்கீட்டுக்கணக்கு**

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 817,443,208 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 796,846,032 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 20,597,176 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 2.52 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 489,200,000 | 731,413,608 | 10,516,213 | 1.44 |
| மூலதனம் | 82,600,000 | 86,029,600 | 10,080,963 | 11.72 |
| மொத்தம் | 571,800,000 | 817,443,208 | 20,597,176 | 2.52 |

**(ii) ஏற்பாட்டினை ஒதுக்கிக் கொள்ளுதல்**

2012 ஆம் ஆண்டில் 262-1-1-2104 ஆவது செலவின விடயத்தின் கீழ் ரூபா 3,376,864 செலவிடப்பட்டு மாவட்டச் செயலகத்தின் சிற்றுண்டிச் சாலையினை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,376,864 தொகையும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைத் தாபிப்பதற்கான மூலதனச் செலவினமாக ரூபா 1,932,728 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. அதற்காக ஆரம்ப மதிப்பீட்டைத் தயாரித்து ஏற்பாடு ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருக்காததுடன், குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலமேனும் ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(iii) பாதீட்டு முரண்**

இரண்டு செலவு விடயங்களுக்கு மிகையாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த

செலவு விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 9.2 சதவீதத்திற்கும் 14.4 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

**(iv) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக 23 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்களினால் ரூபா 3,586,493,292 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,345,833,520 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, சேமிப்பு ரூபா 240,659,772 ஆகக் காணப்பட்டதுடன் அது கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டில் 6.71 சதவீதமாகக் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 101,551,547 சேமிக்கப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவிற்காக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பித்திருக்காமை இச்சேமிப்பிற்கு காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

- சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 19,772,670 சேமிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நலனளிப்பிற்கான உரிய கட்டுநிதி கிடைத்திருக்காமை மற்றும் போசாக்கு நிவாரணத்திற்காக பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கைக்கமைய செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை என்பன இச்சேமிப்பிற்குக் காரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தது.

- ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 62,778,043 சேமிக்கப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட நிதிக்கும் மேலாக நிதி கிடைத்திருந்தமை இச்சேமிப்பிற்கு காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

- தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 37,680,227 சேமிக்கப்பட்டிருந்ததுடன் கட்டுநிதி கிடைத்திருக்காமை இச்சேமிப்பிற்குக் காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

26201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 50,500,000 | 47,959,975 | 35,000,000 | 40,713,962 | 180,000,000 | 178,895,000 |

26201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,908,402 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையை அறவிடுவதற்கு முடியாமல் போயிருந்தது.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் பொது வைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 266,649,366 ஆக இருந்ததுடன் 2 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற ரூபா 261,749 கூட்டுமொத்தமான 07 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று மாவட்டச் செயலகத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 மார்ச் மாதம் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் மாவட்டச் செயலகத்தின் சகல பிரிவுகளையும் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம், சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்காக 2012 யூன் 18 ஆந் திகதி கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.4 உள்ளகக் கணக்காய்வு**

மாவட்டச் செயலகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று காணப்பட்ட போதிலும், நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களை உள்ளடக்கும் வகையில் 2012 ஆம் ஆண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்த வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் இரண்டு கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் அவ்வப்போது செயற்படுத்துவதற்காக பிரேரிக்கப்பட்டிருந்த அநேக தீர்மானங்கள் 2013 யூன் 06 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்ட குறித்த சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 02 | 03 வருடங்கள்<br>01 வருடம் |
| ஏனையவை – தண்ணீர் பில்ரர் (பயன்படத்தப்படாதவை) | 32 | 01 வருடம் |

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

மாத்தறை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள விஹாரைக்குரிய 5.42 ஹெக்டயர் பரப்பளவுள்ள விசாலமான காணி கல்வி நடவடிக்கைகளுக்காக

அரசுடமையாக்கப்படுவது தொடர்பாக 1999 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஒக்தோபர் 31 வரை அதனைச் சட்டபூர்வமாகச் சுவீகரிப்பதற்கும் காணியைக் குறிப்பிட்ட வேலையில் ஈடுபடுத்துவதற்கும் முடியாது போயிருந்தமையால் காணியை அபிவிருத்தி செய்வதற்குச் செலவாகிய ரூபா 23,426,622 தொகை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் பயனற்ற செலவாகியிருந்தது.

## 1.8 இணக்கமின்மைகள்

### 1.8.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை | | |
| (i) 2.8.4 ஆம் வழிகாட்டல் | 225,000,000 | மாவட்டச் செயலகத்தினால் 76 சந்தர்ப்பங்களில் ரூபா 225,000,000 பெறுமதியான கொள்வனவுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று சந்தர்ப்பங்களில் மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம் பெறப்பட்டிருந்தது. |
| (ii) 5.4.8 ஆம் வழிகாட்டல் | - | ஒப்பந்தகாரர்களிடமிருந்து செயலாற்றல் பிணைமுறிச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருபம் | - | தெவிநுவர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியின்றி பயன்படுப்பட்டு வருகின்ற அரசாங்கக் காணிகளுக்காக வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், 2008 ஆம் ஆண்டு முதல் அவ்வறான 17 அனுமதியற்ற காணி உரித்தாளர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.8.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

கம்புறுபிடிய பிரதேச செயலகத்தினால் தனியார் கம்பனியொன்றுக்கு தொலைபேசிக் கோபுரமொன்றை நிர்மாணிப்பதற்காக 2004 ஆம் ஆண்டில் காணி வசதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக குத்தகை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுகக்ப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.9 செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மாத்தறை மாவட்டத்தில் ‘‘பெல் பெபர்’’ பயிர்ச்செய்கைக்காக பாதுகாப்புக் கொட்டிலை நிர்மாணிப்பதற்காக 2012 ஒக்தோபர் 10 மற்றும் 12 ஆந் திகதிகளில் ரூபா 347,292 தொகை செலவிடப்பட்டிருந்தது. பயிர்ச்செய்கை தொடர்பில் சாத்தியக் கற்கை அறிக்கையொன்று காணப்படாததுடன், சந்தைப்படுத்தல் சம்பந்தமாக தெளிவான முறையொன்றும் காணப்படவில்லை. தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட விவசாயிகளின் பயிர்ச்செய்கை வெற்றியளித்திருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் அறுவடை செய்தலும் அவர்களால் கைவிடப்பட்டிருந்தது. அதன்படி இச்செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மாத்தறை மாவட்டச் செயலகத்தினால் 10 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள 50 நலனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு வர்த்தக ரீதியாக அந்தூரியம் பயிர்ச்செய்கை இலக்கிடப்பட்டு 5,000 அந்தூரியம் கன்றுகளை விநியோகித்தல் மற்றும் நிழல் வலைகளை விநியோகித்தல் என்பவற்றிற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 5,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த வழங்குனரால் இறந்துபோன கன்றுகளுக்காக புதிய கன்றுகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 295,200 பெறுமதியான 1,476 கன்றுகளுக்காக மீண்டும் புதிய கன்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன்போது கண்காணித்தல் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் இடம்பெற்றிருக்காததுடன் பயிர்ச்செய்கையாளர்களின் அறிக்கைகளும் தனியார் நிறுவனத்தின் அறிக்கைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் காணப்பட்டன.

(இ) திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2012 ஆம் ஆண்டில் பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் முட்டைக்காக கோழிக் குஞ்சுகள் வழங்குதலின் கீழ் ரூபா 9,307,690 செலவில் 902 நலனாளிக் குடும்பங்களிற்காக 15,054 குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 3,658 அதாவது 25 சதவீதமானவை சேவல் குஞ்சுகளாகும். அதன்படி முட்டைக்காக கோழிக் குஞ்சுகள் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான குடும்பப் போசாக்கு மற்றும் பொருதாரத்தை உயர்த்துதல் என்ற நோக்கம் உரியவாறு அடையப்பட்டிருந்தமைக்கு சான்றுகள் இல்லாதிருந்தன.

(ஈ) கமநெகும செயற்திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டத்தினை அமுல்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய 2012 ஆம் ஆண்டில் அதுறலிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் யஹமுல்ல கனிஷ்ட வித்தியாலயத்திற்குரிய ஓலியகங்கெலே இற்கு அருகாமையிலுள்ள ஏறத்தாழ 05 ஏக்கர் நிலப் பிரதேசத்தை பசுமை மிகு கிராமமாக அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,237,116 செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களாக இனங்காணப்பட்டிருந்த பழக் கன்றுகள், மூலிகைச் செடிகள் மற்றும் பெறுமதியான மரங்களை நடுதல் பணி உரியவாறு இடம்பெற்றிருக்காததுடன் கன்றுகளை பராமரித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 1.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கம்புறுபிடிய பிரதேச செயலகத்தினால் மாத்தறை தேசிய பாடசாலையில் குளம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு 2012 ஒக்தோபர் 24 ஆந் திகதி ரூபா 314,786 செலுத்தப்பட்டிருந்தது. குரித்த வேலையினை புதிய வேலையொன்றாக மேற்கொள்வதற்காக 2012 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடமிருந்து ரூபா 500,000 நிதிஏற்பாடு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவ்வேலை 2012 மார்ச் 08 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டிய வேலை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இவ்வேலைக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இவ்வேலையை நிறைவேற்றியமைக்கு எவ்வித சான்றும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கம்புறுபிடிய பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கம்புறுபிடிய பிரதேச சபைக்கு 02 தகரக் கொட்டில்களை விநியோகிப்பதற்காக 2011 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 145,500 தொகை வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் சபையினால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளில் பொருள் பெற்றதாகவும் பதியப்பட்டிருந்தது. இருப்பினும், 2012 மார்ச் 31 ஆந் திகதி வழங்குனரால் பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் பணத்தைச் செலுத்தி பொருட்களை எடுத்துச் செல்லுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி பொருள் பெறப்பட்டதாக பொய்யான பதிவுகள் இருப்புப் பதிவேடுகளில் இடப்பட்டிருந்தமையும் பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் ஒரு தகரக் கொட்டில் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) மாவட்டச் செயலகத்தால் செலவினத் தலைப்பு 105 இன் கீழ் மகப்பேற்று நிலையங்களிற்காக 35 தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்வனவு செய்வதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,382,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 2.7.5 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக கொள்வனவுச் சபையின் கட்டமைப்புக் காணப்பட்டது.

- கொள்வனவு அறிவித்தலில் 24” Flat model தொலைக்காட்சிப் பெட்டிகளை விநியோகிப்பதற்காக விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் LCD 24” தொலைக்காட்சிப் பெட்டியொன்றுக்கான மிகக் குறைந்த விலையான ரூபா 39,599 இனை சமர்ப்பித்திருந்த நிறுவனம் கொள்வனவுச் சபையால் தெரிவுசெய்யப்படாது LCD 22” தொலைக்காட்சிப் பெட்டியொன்றிற்கு ரூபா 39,500 விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மாத்தறை மாவட்டச் செயலகத்தால் 16 பிரதேச செயலங்களுக்குரிய மகப்பேற்று நிலையங்களிற்காக 02 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் 28 கட்டிடங்களை திருத்துவதற்கும் ரூபா 80,636,234 மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- இந்த நிர்மாணத்திற்காக வழங்குனர்களை தேர்ந்தெடுக்கையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இந்த 28 ஒப்பந்தங்களில் 17 இற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 5.4.8 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறிகளும் பெறப்பட்டிருக்கவில்லை.

- மாத்தறை காலிதாச வீதியில் மகப்பேற்று நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,402,040 ஆன மிகக் குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரர் கொள்வனவுச் சபையால் தெரிவுசெய்யப்பட்டு விலை பேரம்பேசப்பட்டு ரூபா 6,402,040 இற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தகாரரால் நிர்மாண வேலைகளை மேற்கொள்கையில் ரூபா 1,504,986 இற்கு மேலதிக வேலை மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை காரணமாக மொத்தச் செலவு ரூபா 7,907,026 ஆகியிருந்ததுடன் அது அரசாங்க மதிப்பீடான ரூபா 7,611,014 இனையும் விஞ்சியிருந்தது. மேலும், ஒப்பந்தத்தினை பூர்த்திசெய்தலும் 06 மாதங்கள் தாமதிக்கப்பட்டிருந்தது.

## 1.11 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்ட நட்டச் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) வெலிகம பிரதேச செயலகத்தினால் அரசாங்க அபிவிருத்திப் பிரேரணைகளை அமுல்படுத்துவதற்காக காணிகளைக் கையேற்கையில் இடம்பெறுகின்ற இழப்பீட்டினைச் செலுத்தவதன் தாமதம் காரணமாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 21,511,107 மற்றும் 15,057,098 இழப்பீட்டு வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாத்தறை மாவட்டச் செயலகத்தினதும் பிரதேச செயலகங்களினதும் வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த 19 விபத்துக்களில் 14 இற்கான நட்டங்களின் பெறுமதி ரூபா 1,141,194 ஆகக் காணப்பட்டதுடன் 5 விபத்துக்களின் நட்டங்கள் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த விபத்துக்கள் இடம்பெற்று 10 வருடங்களைத் தாண்டியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டதுடன் அது தொடர்பில் நி.பி. 103,

104, 105 இன் படி முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கிற்குரிய டீ.ஜீ.எஸ்.ஏ.–7 ஆம் படிவத்தில் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நட்டமாக ரூபா 293,905 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நட்டச் சேதங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 1,664,200 காசு மோசடி மற்றும் வெலிகம பிரதேச செயலகத்திற்கு தீ வைத்தல் தொடர்பில் மதிப்பிடப்பட்டிருந்த நட்டச் சேதங்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை தீர்வுசெய்யப் படாதிருந்ததுடன் அவை ஒதுக்கீட்டுக் கணக்கிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சிக்கனமற்ற முறையில் இடம்பெற்றிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வெலிகம பிரதேச செயலகத்தினால் கடவர கிங்கஸ்வலயாய கால்வாய்க் கரைக்கு மண் இட்டு சீர்படுத்துவதற்காக ரூபா 1,158,538 செலவிடப்பட்டிருந்தது. நீர் வழிந்தோடல் உரிய விதத்தில் செப்பணிடப்பட்டிருக்காமை காரணமாக அந்த கால்வாயும் விவசாயக் காணிகளும் நீரில் மூழ்குவதனால் அந்த விவசாயக் காணிகளை நெற்பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) வெலிகம பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வதிவிட நிர்மாணம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெலிகம பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வதிவிட நிர்மாண வேலைகள் திட்டமொன்றின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 2,563,756 ஆன ஆரம்ப மதிப்பீடு அவ்வப்போது திருத்தப்பட்டிருந்ததுடன் அது ரூபா 6,564,530 இனை மிகைத்துக் காணப்பட்டது.

(ii) மேற்படி நிர்மாணத்திற்காக 10 ஒப்பந்தகாரர்களால் தேவையான ஆவணங்கள் பூரணப்படுத்தப்படாது கூறு விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் கவனம் செலுத்தாது கொள்வனவுச் சபையால் ஒரு தனியார் நிறுவனம்

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. குறித்த நிறுவனம் பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக காணப்படாமையால் அரசாங்கத்திற்கு அனுகூலமானது என கொள்வனவுச் சபை தீர்மானித்திருந்த போதிலும், அவ்வப்போது பெறுமதிசேர் வரியாக அந்த நிறுவனத்திற்கு ரூபா 491,098 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குறித்த வெலைகள் 2007 திசெம்பர் 12 ஆந் திகதியன்று பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 11 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2008 நவம்பர் 26 ஆந் திகதியன்றே அது கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் 11 மாதங்களும் 11 நாட்களும் தாமதிக்கப்பட்டிருந்த போதிலும், 52 நாட்களிற்காக ரூபா 36,158 தொகை மாத்திரமே தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் படி உத்தியோகபூர்வ வதிவிடம் காடுகளால் சூழப்பட்டு கூறைகளும் யன்னல்களும் கரையான்களால் அழிக்கப்பட்ட வண்ணம் இருந்தன.

**1.13 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கம்புறுபிடிய பிரதேச செயலகத்திற்குரிய ரண்பிம காணி உரித்தாளிகளுக்கு ஒப்படைக்கப்பட வேண்டியிருந்த 08 ரண்பிம காணி உறுதிகள் 08 ஆண்டுகளாக குறித்த காணிகளின் உரித்தாளர்களுக்கு வழங்கப்படாது விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெலிகம பிரதேச செயலகத்தினால் பரவிதூவ காணி அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 05 ஆண்டுகளிற்காக ஆண்டிற்கு ரூபா 232,000 வீதமும் அதன்பின்னர் குத்தகை தாரரால் அந்தந்தக் காலத்திற்காக நிச்சயிக்கப்படுகின்ற தொகைக்கும் 50 ஆண்டுகளிற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 ஓக்தோபர் கணக்காய்வுத் திகதி வரைக்கும் உரிய பிரகாரம் உடன்படிக்கையின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) தெவிநுவர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று 1997 ஆம் ஆண்டு முதல் மாதாந்தம் ரூபா 4,000 வீதம் குத்தகை வாடகைக்கு கூட்டுறவுச்

சங்கமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அச்சங்கம் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக குத்தகை வாடகையினை செலுத்தியிருந்தது. நிலுவைக் குத்தகை வாடகையான ரூபா 116,000 தொகையை அறவிடுதல் தொடர்பில் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ஈ) தெவிநுவர பிரதேச செயலகத்தில் 2009 முதல் 2010 ஆம் ஆண்டு வரை சுனாமி வீடமைப்பு, மாத்தறை கதிர்காமம் புகையிரதப் பாதை அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் நீர்ப்பாசன மேம்படுத்தலுக்காக கையேற்கப்பட்டிருந்த 88 காணித் துண்டுகள் 2012 ஒக்தோபர் மாதம் வரை காணிகள் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அதுரலிய பிரதேச செயலகத்தினால் 35 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கை ஒன்றான நில்வலா திட்டத்திற்காக கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த 28 காணிகள் தொடர்பான நடவடிக்கைகள் 2013 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை முடிவுற்றிருக்கவில்லை.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினறும்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடம்** |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட நிலை | 59 | 59 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 26 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,137 | 916 | 221 |
| (iv) | ஆரம்ப நிலை | 145 | 137 | 08 |
| (v) | பிற (சமயாசமய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 05 | 05 | - |
| | மொத்தம் | 1,380 | 1,143 | 237 |

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 237 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.